ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

சுற்றறிக்கை இலக்கம்: PS/EAD/Circular/06/2023 எனது இலக்கம்: PS/EAD/08/23

2023 ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்
சகல மாகாண பிரதம செயலாளர்கள்
சகல ஆளுநர்களின் செயலாளர்கள்
சகல அரசாங்க அதிபர்கள்/மாவட்ட செயலாளர்கள்
சகல திணைக்களத் தலைவர்கள் மற்றும்
அரச கூட்டுத்தாபனங்கள்/நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள் ஆகியோருக்கும்,

**டெங்கு நோயை தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல்**

இலங்கையினுள் டெங்கு நோய் விரைவாக பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளமையினால் தொடர்ந்தும் பரவுவதை தடுப்பதற்காக அனைத்து நிறுவனங்களின் முனைப்பான பங்களிப்புடனான டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல் அவசியமானதாகும்.

தற்போதைய புள்ளிவிபரத் தரவுகளின்படி, மேல் மாகாணம் அதிஅபாயகரமான வலயமொன்றாக தற்போது இனங்காணப்பட்டுள்ளதுடன், நாடளாவியரீதியில் விரைவாக நோய் பரவும் அபாயத்தை தோற்றுவித்துள்ளது. அத்துடன், அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்கள், நிருமாண வளாகங்கள், பாடசாலைகள், வழிபாட்டு ஸ்தலங்கள், கடற்றொழில்சார்ந்த இடங்கள், வீடுகள் மற்றும் நகரங்களிலுள்ள பொது இடங்கள் நுளம்புகள் பெருகும் அபாயமுள்ள இடங்களாக குறிப்பிடலாம்.

இந்தப் பின்னணியில், நுளம்புகள் பெருகுவதை தடுப்பது தொடர்பாக முக்கிய கவனஞ் செலுத்தப்படவேண்டியதுடன் டெங்கு தடுப்பு நடவடிக்கைகளை தேசிய, மாகாண, மாவட்ட, நிறுவன, கிராமிய மற்றும் வீடுகள் மட்டத்தில் சுகாதாரப் பிரிவுகளின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்துவதற்கு அனைத்து நிறுவனத் தலைவர்களும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுதல் வேண்டும்.

அந்நோக்கத்துக்காக பின்வரும் வழிமுறைகளைக் கையாளுமாறு அறியத் தருகின்றேன்.

1. நிறுவனங்களினுள் டெங்கு தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய வழிமுறைகள்

1.1 டெங்கு அற்ற சூழலை உருவாக்குவதற்காக சகல அரசாங்க மற்றும் பகுதியளவு அரசாங்க நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள் மற்றும் வழிபாட்டு ஸ்தலங்கள் உள்ளிட்ட பொது வளாகங்களில் டெங்கு பரவலைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துதல்.

1.2 நிறுவனத்தினுள் டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய அபாயகரமான இடங்களை இனங்காணுதல், அவற்றை அகற்றுதல் மற்றும் பின் ஆய்வு செய்தல் தொடர்பில் முனைப்பாகப் பங்களிப்புச் செய்யக்கூடியவர்களை உள்ளடக்கிய நிறுவனஞ்சார் குழுவொன்றைத் தாபித்து, அதற்காக தலைமைத்துவப் பொறுப்பை வகிப்பதற்குப் உற்சாகமான ஆளொருவரை பெயரிடுதல் வேண்டும்.

1.3 டெங்கு தடுப்புச் செயற்பாடுகள் குறைந்தபட்சம் வாராந்தம் செயற்படுத்தப்பட வேண்டுமென்பதுடன், உரிய அறிவுறுத்தல்கள் பிரதேசத்தின் சுகாதார வைத்திய உத்தியோகத்தரினால் வழங்கப்படும். நிறுவனங்கள் குறித்த செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையொன்றை பிரதேசத்தின் சுகாதார வைத்திய



ගාලු මුවදොර, කොළඹ 01
காலி முகத்திடல், கொழும்பு 01
Galle Face, Colombo 01
දුරකථන / தொலைபேசி / Telephones ++ 94 (0) 11 2354418 / ++ 94 (0) 11 2473873
ෆැක්ස් / தொலைநகல் / Fax ++ 94 11 2446657
ඊ-තැපෑල / மின்-அஞ்சல் / e-mail prsec@presidentsoffice.lk

உத்தியோகத்தருக்கு மாதாந்தம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**2. டெங்கு தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை வழிநடாத்துதல், கண்காணித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்**

2.1 டெங்கு தடுப்புச் செயற்பாடுகளை நாடளாவியரீதியில் வினைத்திறனாக நிறைவேற்றுவதற்குத் தேவையான சகல ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளும் தேசிய டெங்கு தடுப்புக் கூறு மூலம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கீழ் தேசிய டெங்கு தடுப்புக் கூறினை பலப்படுத்தி டெங்கு தடுப்புச் செயற்பாடுகளை வலுவூட்டும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுதலும் வேண்டும்.

2.2 டெங்கு தடுப்புக்காக மாகாண, மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய மட்டத்திலான தரப்பினர்களினால் சுகாதாரப் பிரிவினருக்கு வழங்கப்படவேண்டிய ஒத்துழைப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் தொடர்புடைய தரப்பினர்களை ஒருங்கிணைக்கும் பொறுப்பு மாகாண ஆளுநர்களிடம் கையளிக்கப்படுகிறது.

2.3 மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கள் மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களின் நிகழ்ச்சிநிரல்களில் டெங்கு தொற்றுநோய் பரவலைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான திட்டங்கள் மற்றும் அவற்றின் முன்னேற்றம் தொடர்பில் கலந்துரையாடப்படுதல் வேண்டும் என்பதுடன் பிரதேசரீதியில் செயற்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் என்பன பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களின் வழிகாட்டலின்பேரிலும் உரிய பிரதேசத்தின் மாநகர சபைகள், பிரதேச சபைகள் உள்ளிட்ட உள்ளூராட்சி நிறுவனங்களின் முனைப்பான பங்களிப்பின்பேரிலும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

2.4 டெங்கு பரவல் ஆபத்துக்கூடிய இடங்களாகக் கருத்தப்படக்கூடிய நிருமாண வளாகங்கள், பாடசாலைகள், வழிபாட்டு ஸ்தலங்கள் உள்ளிட்ட பொது இடங்களும், சுகாதாரப் பிரிவுகளினால் டெங்கு அதிக ஆபத்தான இடங்களாகப் பெயரிடப்படும் வேறு எந்தவோர் இடம் தொடர்பாகவும் மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கள் மற்றும் கிராமியக் குழுக்களின் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும். தேசிய டெங்கு தடுப்புக் கூறு மற்றும் மாகாண சுகாதார அமைச்சினால் வழங்கப்படும் வழிகாட்டுநெறிகளின்படி இவ்விடங்களில் டெங்கு பரவலைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை காலதாமதமின்றி நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.

2.5 மாகாணச் சுகாதாரப் பணிப்பாளர்களினால் பாடசாலைகள், ஏனைய கல்வி நிறுவனங்கள், வழிபாட்டு ஸ்தலங்கள் போன்ற பொது இடங்களில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகளை சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு தடுப்புக் கூறின் ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளுதல் வேண்டும்.

2.6 டெங்கு தடுப்பினை நோக்காகக்கொண்டு நிருமாண ஒப்பந்தங்களில் நிருமாண வளாகங்களுக்குமான சட்டதிட்டங்கள் மற்றும் சுகாதார வழிகாட்டுநெறிகள் உள்ளடக்கப்படுதல் வேண்டும். வெற்றுக் காணிகள், வதிவற்ற ஆதனங்கள், மீன்பிடித் துறைமுகங்கள்சார்ந்த பயன்படுத்தப்படாத / கைவிடப்பட்ட அல்லது உரிமையாளர் இல்லாத படகுகள் என்பனவற்றினுள் டெங்கு நுளம்பு பெருகுவதைத் தடுப்பதற்குரிய சட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுடன் அத்தகைய ஏற்பாடுகள் இல்லையெனில் அவற்றை ஆக்குவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு, நெடுஞ்சாலைகள், அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி, கடற்றொழில் மற்றும் சுகாதார ஆகிய விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சுக்களின் செயலாளர்கள் செயலாற்றுதல் வேண்டும்.

2.7 டெங்கு நோய் தொற்று நிலைமையின் அபாயம் தொடர்பாக தேசிய, மாகாண அல்லது மாவட்ட சுகாதாரப் பிரிவுகளினால் அறிவித்தல் விடுக்கப்படும்பட்சத்தில் தொடர்புடைய தரப்பினர்களின் செயற்பாட்டு ஒத்துழைப்பை சுகாதாரப் பிரிவுகளுக்கு வழங்குதல் முக்கியமான பணியாகக் கருதப்படல் வேண்டும். மேலும், சந்தர்ப்பத்திற்கேற்றவாறு டெங்கு நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்படுத்தலுக்குத் தேவையான மனித மற்றும் பௌதிக வளங்களை வழங்குவதற்காக நிறுவனத் தலைவர்கள் தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமல் டெங்கு பரவலைத் தடுப்பதற்காக எடுக்கக்கூடிய சகல நடவடிக்கைகளுக்கும் முன்னுரிமையளித்துச் செயலாற்றுதல் வேண்டும் என்பதுடன் மேற்குறிப்பிட்ட அறிவுறுத்தல்களை தங்களின் கீழுள்ள எல்லா நிறுவனங்களுக்கும் தாமதமின்றி அறிவிப்பதற்கு உரிய ஒழுங்குகளைச் செய்தலும் வேண்டும்.

டெங்கு நோயைத் தடுப்பதற்காக தாங்கள் மற்றும் தங்களது பணியாட்டொகுதியினர் வழங்கும் முனைப்பான பங்களிப்பை பெரிதும் மேன்மையானதாகக் கருதுகின்றேன்.

நன்றி.
இங்ஙனம் - விசுவாசமுள்ள,

**ஒப்பம்.׃. ஈ எம் எஸ் பீ ஏக்கநாயக்க**
சனாதிபதியின் செயலாளர்

தொலைபேசி: + 94 11 2354420 தொலைநகல்: + 94 11 2446657
மின்னஞ்சல்: prsec@presidentsoffice.lk

பிரதிகள்:
பிரதம அமைச்சரின் செயலாளர்
அமைச்சரவையின் செயலாளர்
கணக்காய்வாளர் தலைமையதிபதி
செயலாளர் - சுகாதார அமைச்சு
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்
பணிப்பாளர் - தேசிய டெங்கு தடுப்புக் கூறு